# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032இ
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண்: 0050/2017

ஆணை எண்: 012/2017

நாள்: 19.01.2017

கிராம பொது மக்கள்,
எண். 56, காட்ரம்பாக்கம் கிராமம்,
திருப்பெரும்புதூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம். 602 105.

மனுதாரர்கள்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

எதிர் மனுதாரர்

## ஆணை

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், எண்.56, காட்ரம்பாக்கம் கிராமம், பொது மக்கள் சார்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்திற்கு தாக்கல் செய்த நாளிடப்படாத மனுவில் காட்ரம்பாக்கத்திலுள்ள தொழிற்சாலைகளிலிருந்து பெறப்படும் வரிப்பணங்களை கிராம வளர்ச்சிக்காக பயன்படுத்தாமல், இருபது வருடமாக தற்காலிக ஊராட்சி செயலாளர் B. வரதராஜன் அவர்களும், அவர் தம்பி K.B.வீரராகவன் முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அவர்களும், ஊராட்சி மன்ற தலைவரின் கையொப்பமிட்டு தொழிற்சாலைகளின்

வரிப்பணத்தைப் பல கோடிகள் ஊழல் மற்றும் மோசடி செய்துள்ளனர் எனத் தெரிவித்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முறையீடு செய்துள்ளார்கள்.

2014 –ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7) ன்படி, "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் , "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரர்களின் மனு இம்முறைமன்ற நடுவத்தின் வரையறைக்குள் வரவில்லை என்பதால் , அவ்வாறே ஆணையிடப்பட்டு இம்மனு மேல் நடவடிக்கைக்காக மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் மாவட்டம், அவர்களுக்கு மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு அவ்வாறே அனுப்பப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 19 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒம்/

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

சென்னை–600 032

25/1/2017

செயலாளர்

பெறுநர்

1. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   காஞ்சிபுரம் மாவட்டம்,
   காஞ்சிபுரம்.

2. கணேசன்,
   கிராம பொது மக்கள் சார்பாக,
   எண்.56, காட்ரம்பாக்கம் கிராமம்,
   இருங்காட்டக் கோட்டை அஞ்சல்,
   திருப்பெரும்புதூர் வட்டம்,
   காஞ்சிபுரம் மாவட்டம் - 602 105.